Exploration of oil in Tamil Nadu

* 219 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the **Minister for Industries be pleased to state whether any Russian** team of Geologists are undertaking survey of the Cauvery delta area **to unearth oil in this State?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

ஆனால், காவிரி கயவாய்ப் பகுதியில் (Cauvery Delta) **எண்ணெய் எரி வாயு ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டு வரும்** துளையிடும் பணிகளுக்கு சோவியத் நாட்டின் சில வல்லுநர்களும் **தொழில் நுட்பப்பணியாளர்களும் உதவி புரிந்து வந்துள்ளார்கள்.**

* 220 வினா—திரு. எஸ். அக்னிராஜ் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-1969-ல் மத்திய அரசு எண்ணெய் எரிவாயு கமிஷன் தமிழ் நாட்டில் பெட்ரோலிய ஆராய்ச்சி நடத்திய இடங்கள் எத்தனை?

(இ) எந்தெந்த இடங்களில் பெட்ரோலியம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) எண்ணெய்—எரி வாயு ஆணைக்குழுவினால் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலக்கூறு இயற்பியல், புவியியல் ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. காரைக்கால், திருப்பூண்டி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், மடானம் பகுதிகளில் ஆழமான ஆய்வுக் கிணறுகளும் (Exploratory Wells), கந்தர்வக் கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, நாக்குடி, காரைக்குடி, பாண்டிக்கண்மாய் பகுதிகளில் கட்டுமானக் கிணறுகளும் (Structural wells) தோண்டும் பணி முடிவடைந்துள்ளது. இவ்வாண்டில் திருத்துறைப்பூண்டி அருகில் மேலும், ஒரு கிணறு தோண்டுவதற்கு எண்ணெய்—எரிவாயு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

(இ) இதுவரை தோண்டப்பட்ட கிணறுகள் எதிலும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஹைட்ரோகார்பன் (Hydro-carbon இருப்பதற்கான அறிகுறிகள் கிடைக்கப்பெறவில்லை என்று எண்ணெய்-எரிவாயு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : காவேரி டெல்டா பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளின் விளைவாக எங்கெங்கே என்ன என்ன எண்ணெய், எரிவாயு முதலியன கிடைக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது? அவற்றை எடுக்க மொத்தம் எவ்வளவு செலவாகும் என்று அரசாங்கம் கருதுகிறது?

1970 மார்ச் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்பே சொன்னேன். இதுவரை தோண்டப்பட்ட கிணறுகள் எதிலும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஹைட்ரோ கார்பன் இருப்பதற்கான அறிகுறிகள் கிடைக்கவில்லை என்று எண்ணெய் எரிவாயு ஆணைக் குழு தெரிவித்துள்ளது. மீண்டும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசினிடம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

Taxis with contract carriage permites

* 221 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether taxis with contract carriage permits in Tamil Nadu are allowed to ply in Pondicherry State also?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம். அவற்றின் அனுமதிச் சீட்டுகளில் புதுச்சேரி அதிகாரிகளின் மேற்கையொப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அவை புதுச்சேரி மாநிலத்திலும் ஓட அனுமதிக்கப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: எந்தமாதிரியான வண்டிகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன? அப்படியானால் அரசாங்கம் என்ன என்ன அளவுகளை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வாடகை மோட்டார் வண்டி, வாடகைக் காரர்கள், சுற்றுலா வாடகைக் கார்கள், சுற்றுலா பேருந்துகள் ஆகியவை புதுச்சேரியுடன் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் அனுமதிக்கப்படுகின்றன.

திரு. பி. வேலுசாமி: இதுபோல வேறு மாநிலங்களைச் சேர்ந்த எத்தனை வண்டிகள், கார்கள், லாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தப் புள்ளி விவரம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

திரு. நா. கிருட்டிணன்: இத்தகைய அனுமதி தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை.

திரு டி. மார்டின்: சென்னையில் ஓடுகிற டாக்சிகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாண்டிச்சேரி சம்பந்தப்பட்ட கேள்வி.